இருந்தாலும் சரி, அல்லது கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, "லா அண்டு ஆர்டர்" இந்த அரசாங்கத்தின் பொறுப்பு.

SRI K. S. MANI: மத்திய அரசாங்கம் வேறு, மாநில அரசாங்கம் வேறு என்று சொல்வதிலிருந்து மத்திய அரசாங்கத்திற்கும் மாநில அரசாங்கத்திற்கும் சம்பந்தமே இல்லை என்று கூறுகிறார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: கனம் அங்கத்தினருக்குத் தமிழ் தெரியுமென்று நினைக்கிறேன். இந்த அரசாங்கம் வேறு, மத்திய அரசாங்கம் வேறு. அதற்காகத்தான், தனித்தனி "ஸாவரெண்டி" என்று ஆங்கில வார்த்தையை உபயோகிக்கிறேன். எனவே சம்பந்தமில்லை என்று சொல்லுவது முறை அல்ல.

SRI P. K. MOOKKIAH THEVAR: ஏ, பி. ஸி நகரங்கள் எந்த அடிப்படையில் பிரிக்கப்படுகின்றன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: ஜனத்தொகை அடிப்படையில் பிரிக்கப்படுகின்றன.

THE HON. SRI K. KAMARAJ: இந்தப் பிரச்னையில் பரிகாரம் தேடுவதற்கு வழியிருக்கிறது. அந்த வழியை அரசாங்கத்தார் யோசித்துக் கொண்டிருக்கிறார்கள். இதிலே ஒரு சரியான முடிவு எடுத்ததற்குப் பின்னர் இதைப் பற்றி அறிவிக்கப்படுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

Sigur Road

*28 *Q.*—**SRI J. MATHA GOWDER**: கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சிகூர் பாதையை பெரும்வழி துறையினர் மேற்கொள்ளும் உத்தேசமுண்டா?

(இ) ஆம் என்றால், எப்போது முதல்?

THE HON. SRI V. RAMAIAH: (அ) & (இ) Ootacamund-Mysore road *via* Sigur from mile 6/2 to 18/0 has been taken over by the Highways and Rural Works Department from the control of Ootacamund Panchayat Union with effect from 1st April 1962.

Kathabetty-Iduhatty Road

*30 *Q.*—**SRI J. MATHA GOWDER**: கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நீலகிரி ஜில்லாவில் கட்டபெட்டு-இடுஹட்டி பாதையை பெரும்வழி துறையினர் மேற்கொள்ளும் உத்தேசமுண்டா?

5th May 1962]

(இ) ஆம் என்றால், எப்போது முதல்?

THE HON. SRI V. RAMAIAH : (அ) & (இ).—Kathabetty-Idhuhatty road from mile 0/0 to mile 6/0 has been taken over by the Highways and Rural Works Department from the Ootacamund Panchayat Union with effect from 1st April 1962.

SRI J. MATHA GOWDER : ஸார், உதகை காட் ரோடுக்கு எவ்வளவு தொகை ஒதுக்கப் பட்டிருக்கிறது, வேலை எப்பொழுது ஆரம்பிக்கப்படும்? அதை பஸ் ரூட்டாக மாற்றி அமைக்கப்பட எவ்வளவு காலம் ஆகும்? 30-வது கேள்வியில் கேட்டிருக்கும் கட்டபெட்டு ரோடுக்கு எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது? எஸ்டிமேட் பூர்த்தியாகி வேலை எப்பொழுது தொடங்கப்படும்?

THE HON. SRI V. RAMAIAH : எஸ்டிமேட் விவரம் என்னிடம் இல்லை. இந்த ரோடுகளையெல்லாம், ஹைவேஸ் டிபார்ட்மெண்ட் நேரிடையாக தங்கள் பார்வைக்கு எடுத்துக்கொண்டிருக்கிறது. அவைகளை நல்ல முறையில் பராமரிக்க ஏற்பாடுகள் செய்யப்படும்.

SRI V. KRISHNAMOORTHY : பஞ்சாயத்து யூனியன் ரோடுகளையும், மற்ற கிராம ரோடுகளையும் ஹைவேஸ் டிபார்ட்மெண்டில் எடுத்துக்கொள்ள என்னென்ன அடிப்படையில் செய்கிறார்கள்? பஸ்கள் செல்லும் பாதைகளையெல்லாம் சர்க்கார் எடுத்துக்கொள்வது என்ற ஒரு முடிவு இப்பொழுது இருக்கிறதா?

THE HON. SRI V. RAMAIAH : The hon. Member may put a separate question.

Tea Plantation labourers (wages)

*31 Q.—SRI J. MATHA GOWDER : கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தேயிலைத் தோட்ட தொழிலாளர்களுக்கு 1961-ம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் பதினைந்து நயா பைசே இடைக்கால கூலி உயர்வு கொடுக்க வேண்டுமென்று கூலி நிர்ணய போர்டார் சிபார்சு செய்திருப்பது சர்க்காருக்குத் தெரியுமா?

(இ) அப்படியானால், இதுவரை இடைக்கால கூலி உயர்வு தோட்ட முதலாளிகள் கொடுக்காமல் இருப்பதற்குக் காரணம் என்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ) ஆம்.

(இ) தேயிலை கூலி நிர்ணய போர்டின் இடைக்கால சிபாரிசுகளின்மேல் இந்திய அரசாங்கத்தின் உத்திரவு 1962 மார்ச் 30-ந் தேதி இந்திய கெஜட்டில்தான் பிரசுரிக்கப்பட்டது. இந்திய அரசாங்கத்தினர் தேயிலை முதலாளிகளை தேயிலை நிர்ணயபோர்டின் இடைக்கால சிபார்சுகளை காலதாமத மன்னியில் நிறைவேற்றும்படியும் கேட்டுக்கொண்டுள்ளனர். தோட்ட முதலாளிகள் அவ்விதம் செய்கிறார்களா என்பதை இந்த அரசாங்கமும் கவனித்து வருகிறது.